# முத்தம்

**பொன் குலேந்திரன் -கனடா**

அடிவானத்தை
ஆரத் தழுவி
மறையும் ஆதவன்
முத்தமிட்டே விடை பெறுகிறான்.

உயர்ந் மலையினை
உயரம் பாராது
உராசியபடியே முத்துமிட்டு
தொடர்கிறான் தன் பயணத்தை
மேகநாதன்

சமுத்திராஜனைத் தேடிவந்து
முத்திமிட்டு
ஒன்றாய் கலக்கிறாள்
கங்கா தேவி

கடலின் அலைகள்
நித்தம் சென்று
கடலோரப் பாரைகளை
முத்தமிட்டு செல்கின்றன

பனித்துளிகள்
புற்களில் மேல் தங்கி

முத்தமிட்டு

மறைந்து விடுகின்றன

மலரின் மணத்தில்

மயங்கிய வண்டு

முத்தமிட்டு

அதன் அமுதத்தை

அனுபவித்தே பறக்கிறது

காதற் பறவைகள்

தம் காதல் உணர்வை

முத்தமிட்டே

செயலில் காட்டுகிறது

மிருகங்கள் கூட

தான் ஈன்ற கன்றை

நாவால் நக்கி

முத்தமிட்டு

அன்பைச் சொரிகிறது

கோயிற் சிலைகளின்

முத்தக் காட்சியை

தன்னை மறந்து

இரசிக்கிறான கலைஞன்

இயற்கையில் இத்தனை

முத்தங்களைக்

பார்த்து இரசிக்கும் நாம்

ஆணும் பெண்ணும்

பொதுவிடத்தில்

அதுவும் சிறுசுகள் முன்

முத்தமிடுவதை

ஆபாசமாக நினைப்பதேன்?

இறைவன் கொடுத்த உதடுகள்

பறவைகளைப் போல்

முத்தமிட்டு

அன்பைப் பொழியத் தானே